புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

=====================================================================

# பண்பாட்டு அடையாளம் ‘மீனாட்சி அம்மன் திருக்கல்யாணக் கோலம்’

முதுமுனைவர் இலட்சுமி கார்மேகம்
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
டிஆர்பிசிசிசி இந்துக் கல்லூரி, சென்னை

=====================================================================

*இலக்கியத் தொன்மையும் நீண்ட நெடிய வரலாற்றையும் உடைய மதுரை மாநகர் தமிழர்களின் கலாசாரம், பண்பாடு, கலைகள் மிக்க வாழ்வியலை அறிய உதவும் மாநகராகும். முதல், இடை, கடைச் சங்கங்கள் போற்றிய நகரம் மதுரை நகரமாகும். தமிழர் போற்றிய காதலும் வீரமும் தமிழர் வணங்கிய கடவுளுக்கான கோவில்களும் தமிழர் அடையாளம் தாங்கிய பல்வேறு தொல்லியல் நினைவுச் சின்னங்களையும் பெற்றுள்ள நகரமாகவும் மதுரை மாநகர் விளங்குகின்றது. கூடல் மாநகர், மதுரையம்பதி, நான்மாடக்கூடல், மீனாட்சி பட்டணம், ஆலவாய், கடம்பவனம், அங்கண் மூதூர், தூங்கா நகரம், கோவில் நகரம், பூலோக கயிலாயம் என்று பல்வேறு பெயரிட்டு இலக்கியங்கள் போற்றும் இந்நகரைக் ‘கிழக்கின் ஏதென்ஸ்’ என்றும் மேலை நாட்டவர் சுட்டுவர். மதுரை பற்றிப் பழந்தமிழ் இலக்கியங்களான பரிபாடல், திருமுருகாற்றுப்படை, சிலப்பதிகாரம், மதுரைக் காஞ்சி, திருவிளையாடல் புராணம், மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், சொக்கநாதர் உலா, தமிழ்விடு தூது உள்ளிட்ட பல்வேறு சங்கப் பாக்களும் புராண இலக்கியங்களும் சிற்றிலக்கியங்களும் பாங்குற விளக்குகின்றன. மதுரை நகரின் அழகிய வடிவமைப்பு குறித்து பரிபாடல்,*

*" மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்*
*பூவொடு புரையும் சீரூர்; பூவின்*
*இதழகத் தனைய தெருவம்; இதழகத்*
*தரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்” (பரிபாடல் 1: 1-4)*

*என்று தாமரை மலர் போன்ற அமைப்பும் கோவில் சிறப்பும் குறித்து வருணிக்கின்றது.*

*“பதியெழு வறியாப் பண்பு மேம்பட்ட மதுரை மூதூர் மாநகர்”*
*(சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை - 5)*

*மதுரைக் காண்டத்தில் மதுரை மக்கள் புலம் பெயர்தல் என்பதையே அறியாதவர்கள் என்று மதுரை நகரின் பல்வேறு சிறப்புகளை இளங்கோவடிகள் விளக்குகின்றார்.*

*மதுரை பற்றிய பதிவுகள் இந்தியாவின் இருபெரும் இதிகாசங்களான இராமாயணம் மற்றும் மகாபாரதம் குறிப்பிடுவது மட்டுமின்றி இலங்கையின் தொல்வரலாற்று நூலான மகாவம்சத்திலும் காணப்படுகின்றன. உலக பயணாளராய்ச் சுட்டுப்படும் மெகஸ்தனிஸ் தன்னுடைய பயண வரலாற்றில் மதுரை குறித்த தகவல்களைப் பதிவு செய்துள்ளார். உலகின் வரலாறு கூறும் பல்வேறு தொல்லியல் பதிவுகளில் மதுரை முக்கியப் பங்கு வகிக்கிறது. வரலாற்றுச் சிறப்பு மிக்க மதுரை நகரை கோவில் நகரம் என்று போற்றப்படும் தன்மையில் பல்வேறு திருத்தலங்கள் நிறைந்த ஆன்மிக பூமியாய் மதுரை மண் இன்றளவும் காட்சியளிக்கிறது. மதுரையை முழுமையாகப் போற்றும் இலக்கியமாகிய மதுரைக் காஞ்சியில் சிவன் கோயில், பௌத்த கோயில் சமண கோயில்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ஆனால் சங்ககாலத்தில் பிற்பட்டதாகக் கருதப்படும் பரிபாடலில் மதுரை பற்றிய கோயிலில் திருப்பரங்குன்றம் முருகன் பற்றிய கோயில் செய்திகள் உள்ளன. மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் பற்றிய குறிப்புகள் காணக்கிடைக்கவில்லை. மணிமேகலையிலும் சைவக் கோயில் பற்றிய*

*பெயர் குறிப்பிடப்படுகின்றது. மதுரையில் கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரையில் தோன்றிய இலக்கியங்கள், கல்வெட்டு செய்திகளில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் பற்றிய செய்திகள் கிடைப்பதில்லை. மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் விஜயநகர நாயக்கர் காலத்தில்தான் விரிவாக்கம் அடைந்துள்ளது. விரிந்த படைப்பு உடையதாகவும் பல்வேறு மண்டபங்களைக் கொண்டும் வியக்கத்தக்க வடிவில் இக்கோயில் காட்சி அளிப்பதற்கு விஜயநகர நாயக்கர் காலத்தின் விரிவாக்கமே என்று மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் பற்றி பேராசிரியர் அம்பை லோ. மணிவண்ணன் (பொற்றாமரை, 2010, ப.13) குறிப்பிடுகிறார். அக்கோயில்கள் சுதையாலோ மரத்தினாலோ செங்கல் மற்றும் சுண்ணாம்புங்களாலோ அழிந்து போகும் பொருட்களைக் கொண்டும் கட்டப்பட்டிருக்கலாம். காலப்போக்கில் அவை அழிந்தும் போயிருக்கலாம். தற்போது கிடைக்கக்கூடிய கோயில் வடிவங்கள் பாண்டியர்கள், விஜயநகர பேரரசுக் காலத்திற்கு ஏற்ப படிப்படியான வளர்ச்சி நிலையைப் பெற்றுத் தற்காலத்தில் உள்ள மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் அமைப்பு காட்சியளிக்கின்றது.*

*திருக்கல்யாணக் கோலம்*

*பண்பாடு என்பது இசை, இலக்கியம், உணவு, ஓவியம், நாடகம், சிற்பம், வாழும்முறை என்று மனிதர்களுடைய ஒவ்வொரு கலைகளிலும் வெளிப்படும் அடையாளம் பண்பாடு. பொருள்களை உருவாக்குவதும், அதற்கான அப்பொருளுக்கான பொருளைத் தோற்றுவிப்பதும், அதற்கான சமூகம் குறித்த தொடர்புனை விளக்குவதும் பண்பாடு என்று பண்பாட்டுவியலாளர்கள் விளக்குகின்றனர். மேலும் பண்பாட்டினை,*

- *அடிப்படைப் பண்பாடு,*
- *கலப்புப் பண்பாடு,*
- *ஒற்றைப் பண்பாட்டியம்,*
- *பல்பண்பாட்டியம்*

*என்று பல் நிலைகளில் வகைப்படுத்துவர். அவ்வகையில் மீனாட்சி அம்மன் திருக்கல்யாணக் கோலம் கலப்புப் பண்பாட்டு அடையாளம் எனலாம். தமிழக வரலாற்றில், பக்தி இயக்கக் காலத்தில் இரு வேறுபட்ட சமயங்களாகச் சைவமும் வைணவமும் திகழ்ந்தன. பன்னிரு திருமுறைகளையும் அறுபத்துமூன்று நாயன்மார்களையும் கொண்டு தனித்தமிழ்நடையில் சைவத் தமிழ் வளர்ந்தது. நாலாயிர திவ்விய பிரபந்தமும் பன்னிரு ஆழ்வார்களும் கொண்டு மணிப்பிரவாள நடை மிக்கதாய் வைணவம் தழைத்தோங்கியது. சைவம், வைணவம் என்ற இரு பெரும் சமயங்களின் ஒற்றுமை வடிவாய், பண்பாட்டு அடையாளமாய் மீனாட்சி அம்மன் திருக்கல்யாணக் கோலம் ஆக்கம் பெற்றுள்ளது. சைவத்தின் முழுமுதற் கடவுளான சிவபெருமானுக்கும் மீனாட்சி அம்மைக்கும் நிகழும் திருமண நிகழ்வினை மீனாட்சி அம்மையின் சகோதரராக வைணவத்தின் முழுமுதற் கடவுளான திருமால் நிகழ்த்துவது போன்று அமைக்கப்பட்ட ஒரு பண்பாட்டுக் காட்சி வடிவமே மீனாட்சி அம்மன் திருக்கல்யாண கோலம். சைவத்தின் முழுமுதற் கடவுளும் வைணவத்தின் முழுமுதற் கடவுளும் ஒருங்கே சங்கமிக்கும் மாபெரும் கலப்புப் பண்பாட்டு அடையாளமாக மீனாட்சி திருக்கல்யாணக் கோலத்தைச் சுட்டலாம். இவ்வடிவத்தின் வெளிப்பாடு தமிழ்ச் சமுதாயத்தில் சைவர்களும் வைணவர்களும் பெண் கொடுத்து, பெண் எடுப்போர் என்னும் உறவுநிலைக்கு வித்திட்டது எனலாம். மக்களிடையே ஒற்றுமையை மேலோங்கச் செய்வதற்கும் சமய ஒற்றுமையை வளர்க்கும் பண்பாட்டு அடையாளமாகவும் மீனாட்சி திருக்கல்யாணக் கோலத்தைக் குறிப்பிடலாம்.*

*பத்தொன்பதாம் நூற்றாண்டின் மானுடவியலாளரான எட்வார்ட் டெயிலர் என்பவர் "பண்பாடு என்பது நுகர் பொருள்களை மட்டுமல்லாது அவற்றை உருவாக்குவனவும் அவற்றுக்குப் பொருள் கொடுப்பனவுமான வழிமுறைகளையும், அப்பொருள்களும், வழிமுறைகளும் பொதிந்துள்ள சமூகத் தொடர்புகள், செயல்முறைகள் என்பவற்றையும் குறிப்பதாகக் கூறுவர்" (எட்வார்ட் டெயிலர், விக்கிப்பீடியா) அவ்வகையில் இருவேறு சமயங்களுக்கு இடையே சமய ஒற்றுமையை, சமய நல்லிணக்கத்தை மக்களிடையே தோற்றுவிக்கும் பொருள் பொதிந்த பண்பாட்டு வடிவமே மீனாட்சி திருக்கல்யாணக் கோலம் ஆகும்.*

*சமய வழிபாட்டு முறைகளில் இறைவனுக்குத் திருக்கல்யாணம் நிகழ்த்தி வழிபடும் முறை இந்து சமயங்களிலே தான் காணப்படுகின்றன. இஸ்லாம் சமயத்திலோ, கிறித்தவ சமயத்திலோ, பிற சமயங்களிலோ இறைவனுக்குத் திருமணம் நிகழ்த்தி வழிபாடு செய்யும் முறை*

காணப்படுவதில்லை. சைவம், வைணவத்தில் இவ்வழிபாட்டுமுறை பெரிதும் போற்றப்படுகிறது. மீனாட்சி திருக்கல்யாணம், முருகன் திருக்கல்யாணம், ஆண்டாள் கல்யாணக் கோலம் என்று திருக்கல்யாணக் கோல வழிபாட்டு முறைகள் தமிழர் பண்பாட்டில் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. சஷ்டி விரதம் முடிந்த ஏழாம் நாளில் தேவசேனையுடன் முருகன் திருக்கல்யாண நிகழ்வு ஆண்டுதோறும் தமிழகம் முழுவதிலும் உள்ள முருகன் கோவில்களிலும் குறிப்பாக அறுபடை வீடுகளிலும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. சிவனின் வடிவங்கள் பல்வேறு நிலைகளில் போற்றப்பட்டாலும் அழகிய சுந்தரராகச் சிவபெருமான் வணங்கப்படும் கோலம் மீனாட்சி திருக்கல்யாணக் கோலம் ஆகும். தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் மீனாட்சி திருக்கல்யாணக் கோலம் என்பது திருமண நிகழ்வில் இன்றியமையாத ஒரு மங்கல வடிவமாகத் திகழ்கிறது. திருமண சடங்குகளின் அழைப்பிதழ்களிலும் கல்யாண நிகழ்வுகளிலும் இவ்வடிவம் இன்றியமையாததாகிறது. ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் கொண்டாடப்படும் திருவிழாக்களில் மைய நிகழ்வாக மீனாட்சி திருக்கல்யாணம் அமைகிறது. தமிழ் இலக்கியங்கள் போற்றும் திருமாலிருஞ்சோலை மலையில் இருந்து கள்ளழகர் வையை ஆற்றில் இறங்கும் நிகழ்வும் மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகம், மீனாட்சி அம்மன் திருக்கல்யாணம் என்று சித்திரைப் பெருவிழா தென்மாவட்டங்களில் முக்கிய நிகழ்வாகக் கொண்டாடப்பட்டுவருகின்றது. பெண்கள் திருத்தாலி பெருக்கும் நிகழ்வு மீனாட்சி அம்மன் திருக்கல்யாண நிகழ்வு அன்று கொண்டாடப்படுகிறது.

*திருக்கல்யாண விழாக்கள்*

மீனாட்சி திருக்கல்யாண விழா பன்னிரு நாட்கள் நடைபெறுகின்றது. முதல்நாள் கொடியேற்றத்துடன் தொடங்கும் இவ்விழாவில் திருவிளையாடல் புராணக் கதையை அடிப்படையாக வைத்தும் ஞானசம்பந்தர் சைவ சமயத்தை நிலைநாட்டிய சமணர்கள் கழுவேற்றிய நிகழ்வோடு தொடர்புப்படுத்தியும் கொண்டாடப்படுகிறது. மீனாட்சி அம்மன் பட்டாபிஷேக நிகழ்வும் மச்ச முத்திரை, இடப முத்திரை, பல்வேறு அணிகலன்கள் கூடிய அலங்காரத்துடன் பாண்டிய மன்னர்களுக்கு உரிய வேப்பம்பூ மாலை அணிந்து, இரத்தின செங்கோல் ஏந்தி மீனாட்சி அம்மன் காட்சியளிப்பாள். மீனாட்சி அம்மன் திக்விஜயம் செல்லும் நிகழ்வு பெரிய அளவில் நிகழ்த்திக் காட்டப்படுகிறது. பல்வேறு நிகழ்வுகளை உடைய இத் திருவிழாவில் பத்தாம் நாள் மீனாட்சி, சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் நடைபெறுகிறது. திருக்கல்யாண மண்டபத்தில் ஆண்டு தோறும் நடைபெறும் இவ்விழாவில் குலசேகரப்பட்டர் வழி சிவாச்சாரியார் சுந்தரேசுவரராகவும் உக்கிர பாண்டிய பட்டர் வழி சிவாச்சாரியார் மீனாட்சி அம்மையாகவும் வேடம் பூண்டு மாலை மாற்றித் திருக்கல்யாண நிகழ்ச்சியை நடத்திக் காட்டுவர். மாலை மாற்றிய பின் மங்கல நாண் அணிவிக்கும் நிகழ்வும் திருமணத்திற்கு வந்தவர்கள் மணமக்களுக்கு சீர்வரிசைகள் வழங்கும் நிகழ்வும் திருமண விழாவில் கலந்து கொண்ட மக்களுக்குக் கல்யாணப் பரிசும் விருந்தும் வழங்குவது ஆண்டுதோறும் வழக்காக உள்ளது. பதினொன்றாம் நாள் தேர்த்திருவிழாவும் பன்னிரண்டாம் நாள் இந்திரன் சாப விமோசனம் பற்றிய திருவிளையாடல் நிகழ்வும் கொண்டாடிய பின் கொடி இறக்கத்துடன் சித்திரை விழா நிறைவு பெறுகிறது. விழாவின் நிறைவாக கள்ளழகர் எதிர்சேவை சித்ரா பௌர்ணமி அன்று நடைபெறுகிறது. மீனாட்சி அம்மன் திருக்கல்யாணமும் கள்ளழகர் வைகையாற்றில் இறங்கும் நிகழ்வும் கலப்புப் பண்பாட்டு அடையாளங்களாகும்.

*நிறைவுரை*

தென்தமிழக மக்களின் வழிபாட்டு முறைகளிலும் வாழ்வியலிலும் கலந்த பண்பாட்டு வடிவமாய் மீனாட்சி அம்மன் கல்யாணக் கோலம் விளங்குகின்றது. சைவத்தின் முழுமுதற் கடவுளான சிவபெருமானும் வைணவத்தின் முழுமுதற் கடவுளான திருமாலும் மீனாட்சி அம்மையும் இணைந்து இருக்கும் மீனாட்சி அம்மன் திருக்கல்யாணக் கோலம் சைவம், வைணவம் ஒற்றுமைக்கு அடையாளமாக விளங்குகின்றது. பன்னிரு நாட்கள் நடைபெறும் இவ்விழாவில் மீனாட்சி திருக்கல்யாணமும் கள்ளழகர் எதிர்சேவை, வையை ஆற்றில் இறங்கி எழுந்தருளல், சைவ சமயம், வைணவ சமய ஒருமைப்பாட்டின் வெளிப்பாடு ஆகும். ஆண்டுதோறும் மதுரையில் சித்திரைப் பெருவிழாவாகக் கொண்டாடப்படும். தென்தமிழக

மக்களின் திருமண சடங்குகளில் இன்றியமையாத மங்கல வடிவமாய் விளங்குகின்றது. திருமணத்தின்போது அலங்கரிக்கப்படும் மங்கல அலங்காரங்களிலும் திருமண அழைப்பிதழ்களிலும் இன்றியமையா வடிவமாய் திருக்கல்யாண கோலம் திகழ்கின்றது. கலைநுட்பம் மிகுந்த இத்திருக்காட்சி மீனாட்சி அம்மன் திருக்கோவிலில் சிற்பங்களாகவும் ஓவியங்களாகவும் காணக்கிடைக்கின்றன. தமிழர்களின் உயர் கலைநுட்பம் மிகுந்த அழகியல் வடிவங்களில் ஆகச்சிறந்த சான்றாய்த் திருக்கல்யாணக் கோலத்தைக் காட்டலாம். பண்பாட்டுப் பொருள் பொதிந்த, சமுதாயத் தாக்கம் மிகுந்த சமய வழிபாட்டுக் கலப்புப் பண்பாட்டு வடிவாய் திருக்கல்யாண கோலம் விளங்குகிறது.

*பயன்பட்ட நூல்கள்:*


1. இராசமாணிக்கனார், மா., சைவசமய வளர்ச்சி, பூம்புகார் வெளியீடு, முதல் பதிப்பு 2011.
2. கணபதி ஸ்தபதி, வை., சிற்பச் செந்நூல், இந்து சமய அறநிலையத்துறை பதிப்பகம், சென்னை, மறுபதிப்பு நவம்பர் 2022.
3. கலியாண சுந்தரனார், திரு.வி., நாயன்மார் வரலாறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட், சென்னை, பதிப்பு 2015
4. சிவப்பிரியா, பக்தி வளர்த்த சங்கமும் சங்க இலக்கியங்களும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு 2006.
5. சுந்தரமூர்த்தி, தமிழ்நாட்டு சிவாலயங்கள் தொகுதி – 1, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு டிசம்பர் 2003.
6. துரைசாமி பிள்ளை, ஔவை. சு., சைவ இலக்கிய வரலாறு, பூம்புகார் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு ஆகஸ்ட் 2011.
7. பாலசுப்பிரமணியன், சி., தமிழ் இலக்கிய வரலாறு, பாரி நிலையம், சென்னை, மறு பதிப்பு, 2011.
8. பிள்ளை, கே.கே., தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, மறுபதிப்பு 2015.
9. மணிவண்ணன், லோ.அம்பை, பொற்றாமரை, ஏஆர் பப்ளிகேஷன்ஸ், இரண்டாம் பதிப்பு 2018.
10. மாணிக்கனார், அ., பெரிய புராணம் மூலமும் தெளிவுரையும் - தொகுதி -2, வர்த்தமானன் பதிப்பகம், ஐந்தாம் பதிப்பு, டிசம்பர் 2000
11. விமலானந்தம், மது. ச., தமிழ் இலக்கிய வரலாறு, முல்லை நிலையம், சென்னை, பதிப்பு – 2016.
12. ஸ்ரீமதி சியாமளா ராகவன், நாகர்கோயில் கிருஷ்ணன், இந்து சமய பண்டிகைகள் வழிபாட்டு முறைகள் - நர்மதா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு - 2012.


*பின்னிணைப்பு*

- *படம் - மீனாட்சி அம்மன் திருக்கல்யாணக் கோலம்*



********* ********* ********** ********* ********* ********** ********** **********